பட்டுச் சேலைகளின் சோலையாகத் திகழும் ஒரே இடம்!
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி,
(உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[பி-9729]

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

கலியாண, முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான இடம்
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி,
(உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[பி97-3]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 19 செவ்வாய்க்கிழமை (02 05 1995) UTHAYAN A LiveLy National Tamil Daily கதிர் 156

நேற்று நடைபெற்ற மேதினப் பேரணியில் கூடிய மக்களில் ஒரு பகுதியினரையும், ஊர்திகளை நிலவத்தையும் மேலே உள்ள படங்களில் வாணாம் பேரணியல் ஆரம்பத்தில் தமிழ் தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரனின்உருவப்படம் எடுத்துச் செல்லப்படுகிறது. [ஐ]

பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இழந்ததால்

உறுதியாக நின்று போராடி உரிமைகளை மீட்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்

ராவ் - சந்திரிகா இன்று சந்தித்து பேச்சு

கொழும்பு, மே 2

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்தியப் பிரதமர் பி. வி நரசிம்மராவை புதுடில்லியில் இன்று காலை சந்திக்கவுள்ளார்.

எட்டாவது "சார்க்" உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா புதுடில்லி சென்றுள்ளார்.

இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவை சந்திக்கவுள்ள ஜனாதிபதி சந்திரிகா இருதரப்பு விவகாரங்கள் குறித்தும் உரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டது (ஐ)

மேதினக் கூட்டத்தில் தமிழ்ச்செல்வன்

யாழ்ப்பாணம், மே 02

பேச்சுவார்த்தை, சமாதானத் தீர்வு மூலம் தமிழ் மக்களின் உரிமைகள் கிடைக்கும் சமாதானம் மலரும் என்ற நம்பிக்கையுடன் இருந்த காலம் போய்விட்டது.

அதில் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் மீண்டும் உறுதியாக நின்று போராடியே எமது உரிமைகளை மீட்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

விடுதலைப் புலிகள் பலவீனமான நிலையில் நின்றே பேச்சுவார்த்தை, சமாதானத் தீர்வு என்ற முடிவுகளை எடுத்தார்கள் என்று சந்திரிகா கருதுவதே இன்றைய துர்ப்பாக்கிய நிலைக்குக் காரணமாகும்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நேற்று நடைபெற்ற மே தின விழாவில் பேசுகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பலவீனமானவர்கள், சிங்களத் தேசியத்துக்கு அடிபணியவேண்டும் என்ற நிலையோடு பேச முற்படுவது மிகவும் முட்டாள் தனமானது — என்றும் அவர் குறிப்பிட்டார்.

திரு. தமிழ்ச்செல்வன் தமது உரையில் தெரிவித்ததாவது:— எமது தேசியத் தலைவரின் போராட்டக் கரத்தை வலுப்படுத்தி நிற்கின்ற நாளாக இன்றைய நாளை இங்கே காண்கிறோம்.

இங்கு திரண்டுள்ள மக்கள் கூட்டம் எமது போராட்டத்தின் முன்னெடுப்புகளில் மிகப் பெரிய சக்தியையும் வேகத்தையும் காட்டுகிறது.

எமது போராட்ட வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்துக்குள் காலடி எடுத்து வைக்கிறோம்.

தரையால் இராணுவத்தின் அத்துமீறல்கள், ஆக்கிரமிப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்ட பின்பு —

கடலால் தனது ஆக்கிரமிப்புக்களைத் தொடர்ந்த அரசுக்கு எமது தேசிய தலைவரின் கூர்மையான வழிகாட்டலில் உருவான கடற்புலிகள் தங்கள் வீரதீரச் செயல்களால் கடலாதிக்கத்தை கட்டுப்படுத்தினார்கள்.

இது அரசாங்கத்தின் உறுதிப்பாட்டிற்கும், ஆக்கிரமிப்பு எண்ணப்பாட்டிற்கும் பலத்த அடியாக அமைந்தது.

அடுத்து தனது வான் படையை முழுமையாக நம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

பாதுகாப்பு காரணங்களால்

அரசின் மேதின கூட்டத்தில் சந்திரிகா பங்குபற்றவில்லை

கொழும்பு, மே 2

கொழும்பு நகரசபை மண்டபத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற பொ. ஐ. முன்னணியின் மேதினக் கூட்டத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கலந்து கொள்ளவில்லை.

மேதினத்தை ஒட்டி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் தொடருமாம்

கொழும்பு, மே 2

வடக்கில் போர் விமானங்களை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்திவிட்ட போதிலும்—

சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இவ்வாறு அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் நேற்றுக் கூறியதாக இந்திய வானொலி

[4 ஆம் பக்கம் பார்க்க]

படையினர் நால்வர் நிலக் கண்ணிக்குப் பலி!

மட்டக்களப்பில் சம்பவம்

கொழும்பு, மே 2

மட்டக்களப்பு பகுதியில் இராணுவ ஜீப் வண்டி ஒன்று நிலக்கண்ணி வெடியில் சிக்கியதில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர்— என்று பி. பி. சி தெரிவித்தது.

இப் பகுதியில் இடம் பெற்ற மற்றொரு மோதல் சம்பவத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மே தினப் பேரணியில் மக்கள் எழுச்சி பொங்கப் பங்குபற்றினர்

யாழ்ப்பாணம், மே. 2

மேதினத்தையொட்டி நேற்று யாழ்ப்பாணத்தில் மிகப் பிரமாண்டமான பேரணி எழுச்சி பொங்கவும், உணர்வு பூர்வமாகவும் நடைபெற்றது.

இப்பேரணியில் குடாநாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினர்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பதும் விதத்திலும், சர்வதேச அரசியல் சூழ்நிலையை எடுத்துக் கூறும் விதத்திலும், சந்திரிகா அரசாங்கம் சமாதானம் என்று இரட்டைவேடம் போடுவதைச் சித்திரிக்கும் விதத்திலும் அமைந்த நூற்றுக்கணக்கான அலங்கார ஊர்திகள் பேரணிக்கு கவர்ச்சி தந்தன.

(4ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு படை முகாம்களுக்கான உணவு, ஆயுத விநியோகம் பாதிப்பு

கொழும்பு, மே 2

விமானங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த ஆரம்பித்திருப்பதை அடுத்து வடபகுதியில் உள்ள பிரதான ஆறு படை முகாம்களுக்கான விநியோகங்களை உறுதிப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது.

வடபகுதியில் உள்ள படை அதிகாரி ஒருவரை மேற்கோள்

[4 ஆம் பக்கம் பார்க்க]



மருத்துவபீட மைதானத்தில் "மே" என்ற வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்த பொதுக்கூட்ட மேடையின் படத்தில் காணலாம். [ஐ]

படங்கள்: எஸ். ராஜ்குமார்

இந்தியாவிடமிருந்து ராணுவ உதவிகள்

அரசு நாடக்கூடும் எனத் தகவல்

கொழும்பு, மே 2

விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருப்பதை அடுத்து எழுந்துள்ள புதிய சூழ்நிலையில் அரசு இந்தியாவின் இராணுவ உதவியை நாடக்கூடும்.

ராஜதந்திரிகளை மேற்கோள் காட்டி வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸி ஒன்று இவ்வாறு தெரிவித்தது.

தென்னாசிய நாடுகளின் [சார்க்] மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தற்போதைய நாட்டு நிலை வரம் குறித்து

[4ஆம் பக்கம் பார்க்க]

உயிரிழந்த படையினரில் மூவர் தமிழர்கள்

கொழும்பு, மே 2

கடந்த வெள்ளியும், சனியும் விடுதலைப் புலிகளால் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவங்களில் உயிரிழந்த படையினரில் மூவர் தமிழர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நவக்கிரி' பகுதியில் விழுந்து நொறுங்கிய விமானம் வானில் 3 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த

பாதுகாப்பு அமைச்சு தெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
802/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

போலி முகம்

மே நாளையொட்டி தாம் நடத்தவிருந்த பேரணிகளை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் நேற்று நடத்தவில்லை; ரத்துச் செய்துவிட்டன.

வடக்கில் விடுதலைப் புலிகள் சுட்டுவீழ்த்திய இரண்டு விமானங்களிலும் பயணம் செய்து உயிர்நீத்த படையினருக்கு அஞ்சலி— மரியாதை— செலுத்துமுகமாக மேதினப் பேரணிகளை ரத்துச் செய்ய அரசு முடிவு செய்தது.

சந்திரிகா தலைமையிலான புதிய அரசாங்கம் பதவியில் அமர்ந்த பின்னர் வந்த முதலாவது மே நாள் விழா நேற்றே ஆகும். அதனால் அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தமது மேதின விழாக்களை பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு பெரும் செலவில் ஒழுங்குகளைச் செய்திருக்கும். இட்டமிட்டவாறு பேரணிகளை நடத்தாமையால் அரசாங்கக் கட்சிகள் தமது அரசியல் பலத்தைக் காட்டக்கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டன!

விமானங்கள் வீழ்த்தப்பட்ட சம்பவங்களில் பலியான அரச படைவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக, மரியாதை அளிப்பதற்காக அரசு வேண்டுமானால் ஒரு நாளையோ அல்லது இரண்டு நாள்களையோ துக்கதினங்களாகப் பிரகடனப்படுத்தி இருக்கலாம்.

ஆனால் அவ்வாறு செய்வது அரசாங்கத்தின் இராணுவத் தோல்வியை பிரதிபலிப்பதாக அல்லது ஒப்புக் கொள்வதாகிவிடும் என்று எண்ணியே மே நாள் பேரணிகளை ரத்துசெய்யும் முடிவை மேற்கொண்டது.

மே நாள் பேரணிகளை தலைநகரில் நடத்துவது பாதுகாப்புப் பிரச்சினையாக இருப்பதைக் கருதியுமே அரசு இத்தகைய முடிவுக்கு வந்திருக்கிறது. கொழும்பிலும் விடுதலைப் புலிகள் தாக்கலாம் எனக் கருதி அங்கு தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வெளிவந்த செய்தியுடன் அரசாங்கத்தின் முடிவை இணைத்துப் பார்த்தால், சந்திரிகா ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தியிருப்பது புரியும்.

இதேவேளை, விடுதலைப் புலிகள், கிழக்கில் கடற்படைக் கப்பல்கள் இரண்டைத் தகர்த்ததாலும், வடக்கில் விமானங்கள் இரண்டை சுட்டு வீழ்த்தியதாலும் படை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டமாட்டா என்று அரசு அறிவித்திருக்கிறது.

இந்நிலையானது, இராணுவத் தளபாடங்களுக்கோ, அல்லது ஆளணியினருக்கோ எவ்வளவு சேதம் ஏற்பட்டாலும், நட்டம் உண்டாகினாலும் போரிலிருந்து விலகிக் கொள்வதற்கு அல்லது அது குறித்து மறுபரிசீலனை செய்வதற்குத் தானும் அரசு தயாரில்லை; அதற்குப் பதிலாக போரைத் தீவிரப்படுத்தவே விரும்புகிறது என்பதனை மிகத் தெளிவாக்குகிறது.

விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்கு, தென்னாசிய நாடுகளும், ஐரோப்பிய நாடுகளும் இராணுவ உபகரணங்கள் உட்பட உடனடி உதவிகளை வழங்க முன்வந்திருப்பதாக "லங்கா புவத்" கூறுவது போரைத் தீவிரப்படுத்த அரசு முனைவதனையே கோடிட்டுக் காட்டுகிறது.

ஈழப்போர் – 3 நடப்பதை அரசு விரும்பவில்லை. அதற்கு அரசு இடங்கொடாது என்று ஜனாதிபதி சந்திரிகா பாரிஸ் புறப்படுமுன்னர் கூறியதற்கு இது முற்றிலும் முரண்பட்டதாகும்.

வடக்கு – கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு என்று அரசு – சந்திரிகா – கூறிவருவது போலி முகமே. தாக்குதல்களின் மத்தியிலும் பேச்சுவார்த்தையைத் தொடரவுள்ளதாக அரசு கூறுவது அர்த்தமற்றதாகும்.

இரு தரப்பாருக்கும் இடையில் ஒரு புறம் போர் நடந்து கொண்டிருக்க, மறுபுறம் சமாதான முயற்சிகள் நடைபெறும் என்று அரச தரப்பில் பிந்தித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது சமாதானத்தைக் கொண்டு வர உதவும் என்று நம்புவதற்கில்லை.

5,000 மீனவ குடும்பங்கள் மன்னார் பகுதியில் பாதிப்பு

உலர்உணவு வழங்க செயலகம் நடவடிக்கை

கொழும்பு மே 02

கடல் வலயத் தடை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதனால் மன்னார் பகுதியில் மட்டும் சுமார் ஐயாயிரம் மீனவக் குடும்பங்கள் எதுவித வருமானங்களும் இன்றி பாதிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள நாலாயிரம் குடும்பங்களுக்கு ஒரு வார காலத்துக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்க மன்னார் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் தங்களது வறுமையை போக்கப் போதுமானதாக இந்த உதவி அமையவில்லை என்று மீனவக் குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் கடந்த திங்கட்கிழமை காலை, விடத்தல் தீவில் இராணுவ விமானங்கள் வீசிய குண்டுகளினால் பெண் ஒருவர் பலியானார். மேலும் இருவர் காயமடைந்தனர். ஐந்து வீடுகளும் சேதமடைந்தன.

அரசியல், ராணுவத்தில் உள்ள

கடும் போக்காளர்களிடம் இலங்கை அரசு சரண்

பொருளாதாரதடை அமுல் குறித்து 'இந்து'

அரசியல், இராணுவ மட்டத்தில் உள்ள கடும் போக்காளர்களிடம் இலங்கை அரசு சரண் அடைந்துள்ளதையே, யாழ். குடா நாட்டின் மீது மீண்டும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டமை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு இந்தியாவில் இருந்து வெளிவரும் 'இந்து' நாளிதழ் இலங்கை அரசினை சாடியிருக்கிறது.

கடந்த திங்கட்கிழமை வெளியான 'இந்து' பத்திரிகையில் ''மீண்டும் துரோகம் இழைப்பு'' என்ற ஆசிரியத் தலையங்கத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எத்தகைய நெருக்குதல் ஏற்பட்டாலும் யாழ். குடா நாட்டின் மீது மீண்டும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டமை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு இந்தியாவில் இருந்து வெளிவரும் 'இந்து' நாளிதழ் இலங்கை அரசினை சாடியிருக்கிறது.

கடந்த திங்கட்கிழமை வெளியான 'இந்து' பத்திரிகையில் ''மீண்டும் துரோகம் இழைப்பு'' என்ற ஆசிரியத் தலையங்கத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எத்தகைய நெருக்குதல் ஏற்பட்டாலும் யாழ். குடா நாட்டின் மீது மீண்டும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டமை அரசின் முன்யோசனை அற்ற செயலையே காட்டி நிற்கின்றது. அண்மையில் நீக்கப்பட்ட பொருளாதாரத் தடை குடாநாட்டு மக்களுக்கு ஓரளவு ஆறுதலை அளித்தது.

இப்பொழுது மீண்டும் பொருளாதாரத் தடை அமுல் செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய பொருளாதாரத்தடைகள், புலிகளின் தலைமைத்துவத்திற்கு எத்தகைய பாதிப்பினையும் ஏற்படுத்தப்போவதில்லை.

மாறாக, சாதாரண மக்களையே பாதிக்கும்; அவர்களுக்கே அதிக அழுத்தத்தை கொடுக்கும்.

இது உலகமகாயுத்தியில் நிரூபிக்கப்பட்ட உண்மை.

சிங்களக் கடும் போக்காளர்களிடமோ அல்லது விடுதலைப் புலிகளிடமே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கசரண் அடைந்து விட்டதையே, உடனடியாக இந்த பிரதிபலிப்பு சுட்டிக் காட்டுகிறது. இது வரவேற்கத்தக்க ஒரு விடயம் அல்ல; இது ஒரு தரகிர்ஷ்ட வசமான நடவடிக்கை.

எதுதடன், இத்தகையதொடர்தல் கூடாது.

அவ்வாறு அவர் சரணடைவதானது சமாதானத்தை ஏற்படுத்துவதாகக் கூறி பெற்றமக்கள் ஆணைக்கு முரணானது ஆகும்.

கருத்திற் கொள்ளத் தக்க தற்போதய பின்னடைவாக இலேசம் கொள்ளாமல், ஜனாதிபதி சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கமைய, தாம் வெளிப்படுத்தாமல் இருக்கும் அரசியல் தீர்வு யோசனைகளை ஜனாதிபதி வெளிப்படுத்தவேண்டும்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இது அவசியமானதாகும்.

தீவிரப் போக்காளர்களிடம் அரசு சரணடைவதானது, 5 மாதங்களுக்கு முன் ஜனாதிபதியும், அவரது பொதுசன ஐக்கிய முன்னணியும் தாம் சமாதானத்தை ஏற்படுத்துவதாகக் கூறி மக்களிடம் பெற்ற ஆணைக்கு முரணான செயலாகும்.

இவ்வாறு அந்த ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

புலிகளின் குரல் வானொலியில்

02 — 05 — 1995

செவ்வாய் இரவு

★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10 — நேற்றைய தினம் நடைபெற்ற தொழிலாளர் தின நிகழ்ச்சிகளின்தொகுப்பு
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம்— இ. இராஜேஸ்வரன் எழுதிய ''வெற்றிப் பாதையில்.....''
★ 8-50 — மலரும் மொட்டுகள் என்பன இடம் பெறும்

03 — 05 — 1995

புதன் காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்

தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

செவ்வாய் மாலை

★ 5-01 — சிந்தனைக் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதிப்பீடு — 18
★ 6-00 — சிந்தனைக்குச் சில விளாடிகள்
★ 6-02 — இவ்வாரம் இவர்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு
★ 6-30 — மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

பாக்ஸ் மூலம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே. 2

வடபகுதிக்கு எடுத்துச் செல்ல மீண்டும் தடைவிதிக்கப்பட்ட 21 பொருள்களின் விவரங்கள் அடங்கிய—பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகத்தினால் ஏப்பிரல் 27ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை [பாக்ஸ்மூலம் யாழ் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ

தேடுதல் நடத்தும் பொலீஸார்

கர்ப்பிணிகளையும் விட்டு வைப்பதில்லை

யாழ்ப்பாணம், மே 2

கொழும்பு நகரில் தமிழர் மீதான பொலீஸாரின் தேடுதல் வேட்டைகளில் கர்ப்பிணிப் பெண்கள் கூட விட்டு வைக்கப்படுவதில்லை என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் பொலீஸாரின் தேடுதல் வேட்டையின் பின் வயது வேறுபாடின்றி விசாரணைக்காக பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் கர்ப்பிணிப் பெண் ஒருவரும் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள தமிழர்கள் தங்கும் விடுதிகள் வீடுகளில் நள்ளிரவு வேளைகளில் பொலீஸார் இந்த தேடுதல் வேட்டைகளில் ஈடுபடுகின்றனர்.

தேடுதலின்போது விசாரணைக்காக அழைத்துச் செல்பவர்களிடம் பெருந்தொகைப் பணம் கப்பமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டு வருவதாகவும்—இதற்கு அங்குள்ள விடுதிகளின் உரிமையாளர் சிலரும் உடன்பட்டதையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

காங்கேசன்துறையில் கடற்படைத் தளம்

யாழ்ப்பாணம், மே 2

காங்கேசன்துறை, துறைமுகப் பகுதியில் கடற்படைத் தளம் ஒன்று ஒரு சில மாதங்களுக்கு முன் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் நங்கூரமிடப்பட்டிருந்த பழைய கப்பலில் முன்னர் இக்கடற்படைத் தளம் இயங்கி வந்தது.

இக்கப்பல் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டதை அடுத்து தற்போது புதிதாக இத்தளம் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில்

கொடிகாமத்தில் தையல்பயிற்சி

தென்மராட்சி, மே. 02

தென்மராட்சி பிரதேச கிராமிய அபிவிருத்தி பிரிவினரால் கொடிகாமம் மத்தியில் யுவதிகளுக்கான புதிய தையல் பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன

மாகாண கிராமிய அபிவிருத்தி நிதைகளத்தினால் வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் இப்பயிற்சி நிலையத்திற்கு வழங்கப்படவுள்ளன. (இ-117)

இருந்து மாதகல் வரை கடற்கரைப்பகுதியில் கம்பிவேலி ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

மார்ச் மாத ஒளி நாடா வெளி வந்தது

யாழ்ப்பாணம், மே 2

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையான ''ஒளி வீச்சு'' 1995 மார்ச் மாத ஒளிநாடா வெளி வந்து விட்டது.

★ சாகும்வரை உண்ணாவிரதமிருந்த ஸ்ரீலங்கா யுத்தக் கைதிகள் விடுதலை.

★ 12 கைத்தொழில் நாடுகளில் இராஜதந்திரிகள் யாழ். நகர் வந்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்தமை.

★ ''சமகாலப் பார்வை'' எனும் அரசியல் நோக்கு.

★ கலை நிகழ்ச்சிகள்.

என்பனவும் மற்றும் பல வழமையான அம்சங்களும் இவ் ஒளிநாடாவில் இடம் பெற்றுள்ளன.

இவ் ஒளிநாடாஇன்று செவ்வாய்கிழமை மாலை 6-00 மணிக்குச் ஸ்ரீதர் திரையரங்கில் இலவசக் காட்சியாகக் காண்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாற்றங்கள் தேவைப்படுவது ஏன்?

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை பற்றி பெற்றோர், ஆசிரியர், மாணவர் மற்றும் கல்வி உலகோடு தொடர்புடைய அனைவரும் கவனம் செலுத்தி வருவதை பரவலாக அவதானிக்க முடிகின்றது. இப்பரீட்சையில் சில மாற்றங்கள் ஏற்பட இருப்பதே இதற்குப் பிரதான காரணமாகக் கொள்ள வேண்டியுள்ளது.

முறைசார்ந்த எமது கல்வி அமைப்பில் ஆரம்பக் கல்வி நெறியை பாடசாலையில் கற்கும் மாணவர் தமது ஆண்டு ஐந்து வகுப்பில் முதன் முதலில் தேசிய மட்டத்திலான இப்பொதுப் பரீட்சைக்குத் தோற்றிவருகின்றனர்.

குறிப்பிட்ட புள்ளிகள் பெற்று சித்தி பெறுபவருக்கே அவர்களின் ஆற்றல், திறன், விவேகம் ஆகியன இனங்காணப்பட்டு புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனால் வசதியுள்ளோர் வசதி குறைந்தோர் பிள்ளைகள் பயன் பெறுகின்றனர். வசதியுள்ள-வளமான பெரிய பாடசாலைகளில் பரிசில் பெற்ற மாணவர் சேர்ந்து தமது கல்வியை விருத்தி செய்ய வழிசமைத்து இப்பரீட்சை கொடுப்பதால் வசதி குறைந்த பெற்றோர் இதனை மிகவும் வரப்பிரசாதமாகவே நோக்குகின்றனர்.

இப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவரின் உடல், உள முதிர்ச்சிக்கும்—

வயது மட்டம், அறிவுமட்டத்திற்கும் இப்பரீட்சை பொருத்தமுடையது தானா? என்பதில் ஐயப்பாடு எழுந்துள்ளது.

பரீட்சிக்கும் பாடங்கள், அப்பாட அலகுகள், வினாக்களின் தன்மை ஆகியவை இச்சிறார்களுக்கு மிகவும் பொருத்தமுடையவை யல்லவே என்பது கல்வியியலாளர்களால் இப்போது உணர்வூட்டப்பட்டுள்ளது.

ஆண்டு எட்டு வகுப்பில் கற்கும் மாணவர்களுக்குத்தான் புலமைப்பரிசில் பரீட்சை நடத்தி ஆற்றல் இனங்காணப்பட்டு பரிசில் வழங்கப்படவேண்டுமெனவும் சிந்தனையாளர் சிலர் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

நடைமுறையில் பெற்று வந்த வசதிகளை இழப்பதற்கு சமூகம் விரும்பாது. எனினும் சில முக்கியமான மாற்றங்களை இவ்வாண்டுப் பரீட்சையில் மேற்கொள்ள கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஆரம்பக் கல்விப் பாடசாலையே பொழிப் பயிற்சிக்கும், மொழிக்கல்வியை அறிமுகம் செய்வதற்கும் சிறந்த இடம்.

அடிப்படை மொழித்திறன்களான பேசுதல், கேட்டல், வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு கணிதம், சூழல், ஆக்கத்திறன், அழகியற்கல்வி, சமயம், உடல்சார்ந்த பண்பாட்டுச் செயற்பாடுகள் என்பனவும் ஆரம்பக் கல்வியின் அடிப்படைக் கருவூலங்களாகும்.

தேசிய மட்டத்தில் ஆற்றலுள்ளோர் எண்ணிக்கையை இனங்காண்பதற்கு ஒரு பரீட்சையை அளவு கோலாகக் கொள்வது தேவையான செயற்பாடே. ஆனால் நடைமுறையிலுள்ள போட்டிப் பரீட்சையை பொருத்தமான அளத்தல் முறையாகக் கொள்ள முடியவில்லை.

சிறப்பான ஆற்றல்களும், உளச்சார்புகளும் பிள்ளைகளில் இனங்காணப்பட்டு அவற்றின் அடிப்படையில் அவர்களை ஆற்றுப்படுத்துவது அவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவும் என்பது நீண்டகாலமாக உள்ள ஒரு குறிக்கோள்தான்.

ஆனால் இளம் சிறார்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட வயதில் இப்பரீட்சை நடைபெறுகிறதா? தெரிவு [illegible] நடத்தப்படும் பரீட்சை [illegible] ஆகக் கூடிய மிகப் பொருத்த முடைமைக்கும் அதன் முக்கியத்துவம் கொடுக்காது— இயற்கை மனப்பாங்கை அளந்தறியும் இயல்புடையதாக பரீட்சை அமைந்திருக்க வேண்டும்.

செயற்பாட்டுமுறைகளுக்கும் ஒன்றிணைந்த முறைகளுக்கும் வலுவூட்டக் கூடியதாக அவ்விடல் அலகுகளும், பரீட்சை முறைகளும் அமைதல் வேண்டும்.

ஆரம்பக் கல்விப் பாடத்திட்டத்தின் முழுமையான அலகுகளினதும், கல்விப் போதனையின் அணுகுமுறையினதும் ஆடிப்படைப் பண்பினதும் செல்வாக்கை மாணவர் எவ்வளவு தூரம் பெற்றுள்ளனர் என்பதை அறிவதாக பரீட்சை அமைதல் வேண்டும்.

இதுவரை காலமும் ஒவ்வொரு வருடத்திலும் ஆவணி மாதத்தில் நடைபெறுவந்த இப்பரீட்சையை இம்முறை டிசம்பர் மாதத்தின் ஆரம்ப வாரத்தில் ஜி.சீ.ஈ. [சா/த] பரீட்சை நடைபெறுவதற்கு முன் நடத்த திட்டமிடப்பட்டிருப்பது எல்லோரும் அறிந்த விடயமே.

பரீட்சைக்கான வினாத்தாள், வினாத்தாள் தயாரிக்கும் பாடப்பரப்பு வினாக்களின் வகை, தரம் ஆகியவற்றிலும் பண்புரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

புதிய முறைக்கு அமைய பரீட்சை டிசம்பரில் நடைபெற இருப்பதால் இப்புதிய முறைக்கு ஏற்ப மாணவரைத் தயார்படுத்துவதற்கு போதிய கால அவகாசம் உண்டு.

முதலாவது வினாத்தாள் முற்பகல் 9-30 முதல் 10-15 [illegible] நாற்பத்தைந்து நிமிட நேரத்தினைக் கொண்டதாக அமையும். இதில் மாணவர்களின் படிப்புத்திறமையை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான விதத்தில் வினாத்தாள் இடம் பெற்றிருக்கும்.

வினாத்தாள் இரண்டு முற்பகல் 10-45 முதல் நண்பகல் 12-00மணிவரை ஒன்றேகால் மணித்தியாலம் கொண்டதாக அமைந்திருக்கும். இதில் ஆண்டு ஒன்றுமுதல் ஆண்டு ஐந்து வரையிலான ஆரம்பப் பாடநெறிக்கு அமைவான வினாக்கள் இடம் பெற்றிருக்கும்.

இப்புலமைப் பரீட்சையின் போது சகல மாணவர்களும் பெறும் புள்ளிகள் பற்றி அவர்களுக்கு அறிவிக்கப்படும்.

இம்முறை நடைபெற இருக்கும் இப்பரீட்சையிற் பாடப்பரப்பின் அலகுகள் மூன்னர் உள்ளதில் இருந்து வேறுபடுவதால் வழமையான பாடப்பரப்புகளை மட்டும் கொண்டு பரீட்சைக்குதயார்படுத்துவது புத்திசாலித்தனமல்ல.

இளம்பராயமானது சுதந்திரம், தன்னம்பிக்கை, காழ்ப்புணர்வு, செயல்திறன் கொண்டு மிளிர்வது.

வீடு பாடசாலை, நியூசன் என ஒப்பின்றி பிள்ளைகள் இயங்குவதும், தொடர்ந்து கணிதம், தாய்மொழி, ஆகிய இரண்டையும் கற்பதும் அவர்களின் உடல் உளச் சோர்வுக்குக் காரணங்களாகின்றன. சிலர் குழப்பமும் விரக்தியும் அடைகின்றனர். இதனால் அவர்களின் இயல்பான நாட்டங்களும் ஆளுமையும் பாதிக்கப்படுகின்றன ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகளுக்கு தயார்ப்படுத்தும் வளர்ந்த மாணவர்களைப் போல இரவு பகலாக தொழிற்படுவதாலும், மேலதிகமான வீட்டு வேலைச் சுமையினாலும் இளம் சிறார்கள் இரட்டப்படுகின்றார்கள். இரண்டு வளர்ந்த பெரிய மாணவர்களைப்போல் இயங்கவைப்பது பொருத்தமற்றது.

புதிய முறை பயனுடையது

பிள்ளைகளைப் பிள்ளைகளாகவே கருத வேண்டும். அவர்களுக்குப் பொருத்தமான செயற்பாடுகளையே வழங்க வேண்டும். கற்பித்தல் அணுகுமுறைகளையும், மதிப்பீடையும் நடத்த வேண்டும்.

எனவே இப்புதிய திட்டத்தை பெற்றோரும், ஆசிரியரும், மாணவரும் கல்வியோடு தொடர்புடைய பிறரும் விரும்பி ஏற்பர் என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் கற்கும் சகல மாணவர்களும் ஒரே விதமான நியமங்களுக்கேற்ப கொண்டே மதிப்பீடு செய்யப்படுகின்றனர்.

ஆனால் குறிப்பிட்ட அடைவுப் புள்ளிகளைப் பெறும் பிள்ளைகள் அனைவரும் புலமைப் பரிசிலுக்கு தகுதியானவர்களெனக் கணிக்கப்படுவது ஒரு குறைபாடாகவே கல்விச் சிந்தனையாளர்களால் உணரப்பட்டுள்ளது. இக்குறைபாட்டைப் போக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், கல்வியாளர்களும் ஆவன செய்ய வேண்டும்.

இளம் சிறார்களின் ஆற்றலை, உளச்சார்புகளை இனங்கண்டு புலமைப் பரிசில் பெறத்தகுதியானவர்களை தெரிவு செய்யும் உன்னதமானதும் பொறுப்பு வாய்ந்ததுமான கடமையில் ஈடுபடும் பரீட்சகரின் பணி மேலானது.

பரீட்சகர்கள் மிகப் பொறுப்புணர்ச்சியுடனும், நியாய சித்தனையுடனும் பக்கச்சார்பற்ற விஞ்ஞான உளப்பாங்குடனும் கடமையாற்ற வேண்டும்.

— வ. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனையாகிறது

நீண்ட நாட்களாக வெளி வராமலிருந்த ஒளவையார் அருளிச்செய்த ஆத்திசூடி (பதவுரை பொழிப்புரையுடன் கூடியது) கொன்றை வேந்தன், வாக்குண்டாம், அதிவீர ராமபாண்டியனின் வெற்றி வேற்கை — மூலமும் தெளிவு உரையுடன். வியாபாரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் சலுகை வுண்டு. ஸ்ரீலங்கா புத்தக சாலை, இல 234, கே. கே. எவி. வீதி, யாழ்ப்பாணம். (சி-1127)

தங்காலி விதை. பசன் கன்று விற்பனைக்கு உள்ளது. Taste Line Industries (Pvt) Ltd 14 Seenier lane, affna. [சி-1102]

அறிமுக மலிவு விற்பனை

யாழ்ப்பாண புத்தக நிலையம், 448 மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1340)

கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Broiler குஞ்சுகள் பதிவு செய்து 6-5-95 சனிக் கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [36482]

சிப்பாயின் சகோதரர் தற்கொலை

கொழும்பு, மே 2

திருகோணமலையில் கொல்லப்பட்ட கடற்படைச் சிப்பாய் ஒருவரின் சகோதரர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

1985ஆம் ஆண்டு மரணமான சகோதரரின் இழப்பால் மனவேதனை அடைந்திருந்த இவர் 93ஆம், 94ஆம் ஆண்டுகளில் இருதடவைகள் தற்கொலை முயற்சி செய்தவர்.

பழுனுமை புல்லு ஹேனையைச் சேர்ந்த பீ.கே. ஜோசப் நிரோஷ் மங்கள (வயது 21) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார். (இ-14)

பாம்புக்கடி அதிகரிப்பு

வடமராட்சி, மே 2

வடமராட்சிப் பகுதியில் பாம்புக் கடிக்குள்ளாவோர் எண்ணிக்கை கடந்த சில தினங்களாக அதிகரித்து வருகிறது.

அகோர வெயில் காரணமாக புற்றுக்கள், பற்றைகளில் இருந்து பாம்புகள் குடி மனைகளுக்குள் வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-173]

திருநெல்வேலி கிழக்கு
வாலையம்மன் சனசமூக நிலையத்தினர்
நடத்தும்
வைத்தியகலாநிதி
அமரர் இ. பாக்கியநாதன் (ஜே.பி)
அவர்களின்

நினைவுப் பேருரை - 1995

இடம்: யா/செங்குந்த இந்துக்கல்லூரி
காலம்: 02-05-1995 செவ்வாய்க்கிழமை
மாலை 3. 30 மணி

நினைவுரை:
வைத்தியகலாநிதி எஸ். பவானி
(தலைவர் - சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

நினைவுப் பேருரை:
"சித்தரின் சமய சித்தாந்தம் — ஓர் ஆய்வு"

நிகழ்த்துவர்:
திரு. எம். வேதநாதன் (எம் ஏ.)
சிரேஷ்ட விரிவுரையாளர் — இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி.
— நிர்வாகத்தினர்

நிகழ்வு சிறப்புற வாழ்த்துவோர்:
ஸ்ரீமுருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்
ஆடியபாதம் வீதி, நல்லூர் மார்க்கட்.
காவேரி சீயாக்காய்ப் பவுடர்
ஆடியபாதம் வீதி, நல்லூர் மார்க்கட். (36487)

எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்) 411/1, K. K. S Rd. யாழ்ப்பாணம்
(கொக்குவில் இந்து அருகில்) 27, K. K. S Rd. கொக்குவில்

O/L DAY CLASS

மற்றுமோர் 2 வது புதிய பிரிவு
கணிதம்
திரு B. P. பாஸ்கரன்
விஞ்ஞானம்
யாழ். முன்னணி ஆசிரியர் J. J கொலின்ஸ்
வடமராட்சி பிரபல ஆசிரியர் N மகேந்திரன்
வடமராட்சி முன்னணி ஆசிரியர் எஸ். செல்வா

★ ஏனைய பாடங்களுக்கும் பிரபல ஆசிரியர் குழு
★ ஆண்டு 9.10.11 பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்
★ கணிதம் இலகு முறையில் அடிப்படையில் இருந்து போதிக்கப்படும்

ஆரம்பம்
04-05-1995 வியாழன் மு.ப 8 30
(சி/1130)

ராணுவத்திலிருந்து தப்பிய சிப்பாய் வங்கிக் கொள்ளையின் சூத்திரதாரி

கொழும்பு, மே 2

திஸ்ஸ மஹாராமை சனசக்தி வங்கிக் கொள்ளை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள பிரதான நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவர் என தெரிவிக்கப்படுகின்றது.

வங்கியிலிருந்து கொள்ளையிடப்பட்ட 93 இலட்சம் ரூபாவில் 33 இலட்சம் ரூபாவை பொலீஸார் இவரிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

கடந்த வார இறுதியில் மேற்படி நபர் தலைமையிலான குழு ஒன்று துப்பாக்கிகளுடன் வங்கிக்குள் புகுந்து வங்கியின் பெண் முகாமையாளரை பயமுறுத்தி பணத்தை கொள்ளையிட்டு சென்றிருந்தது.

ஏனையோரையும் கைது செய்யும் நடவடிக்கையில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர். (இ-14)

அரச அதிபரின் கடிதமின்றி லொறிகள் வடக்கே வரலாம்

வவுனியாவில் இருந்து வடக்கே வரும் லொறிகள் அரச அதிபர்களிடம் அனுமதிக்கடிதம் பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்ட நடைமுறை கைவிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது

வவுனியாவில் இருந்து வடக்கே உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு வரும் லொறிகளின் உரிமையாளர்கள் தேத்தமது மாவட்ட அரச அதிபர்களிடம் அனுமதிக் கடிதங்களை பெற வேண்டும் என்று படையினர் புதிய நடைமுறையை அறிவித்திருந்தனர்.

இந்த நடைமுறை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கடந்த சனியன்று படையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

மூன்றாவது கல்விவலயம் வரணியில் இயங்கும்

பருத்தித்துறை, மே 2

யாழ். மாவட்டத்துக்கான மூன்றாவது கல்வி வலயம், இம் மாதம் 15 ஆம் திகதி முதல் தென்மராட்சி வரணி கிராம சேவகர் பிரிவில் இயங்க உள்ளது

இந்த மூன்றாவது கல்வி வலயம் வடமராட்சி தென்மராட்சி கோட்டங்களை உள்ளடக்கியதாக அமையும்.

இக் கல்வி வலயம் அமைக்கப்பட்டதும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரிவுகளில் உள்ள கோட்டக் கல்வி அலுவலங்கள் யாவும் வட்டாரக் கல்வி அலுவலகங்களாக செயற்படும்.

தற்போது உள்ள பிரிவுகளிலும் அதிகமாக தொகுதிக்கு ஒரு வட்டாரக்கல்வி அதிகாரி நியமிக்கப்படுவார்.

அதே சமயம், யாழ் மாவட்டத்தில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களின் சுய விவரக் கோவைகள்—

மற்றும் ஆசிரியர்களின் சம்பளங்களை வழங்குவது தொடர்பான வேலைகள் என்பன — யாழ். மாவட்ட கல்வித் திணைக்களத்திற்கு, எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன் மாற்றப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய நடைமுறையின் படி, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தங்கள் பிரிவுக்கு உட்பட்ட கற்றல் கற்பித்தல் வேலைகளை மட்டுமே மேற்பார்வை செய்வார்கள். (இ-5-118]

கிழக்கு பல்கலைக்கழக சந்திரிகாவின் அரசு

மகாசிவம் தெரிவிப்பு

வலிகாமம், [மே 2

'1992-93 மற்றும் 1993-94 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதியில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெற்றிடத்தில் முன்றில் ஒரு பங்குக்கு குறைந்த வெற்றிடமே நிரப்பப்பட்டது. இது கல்விச் சமூகத்துக்கு சந்திரிகா அரசு வழங்கிய முதல் சாட்டை அடி.'

தென்னிலங்கை — உடுவில் கல்விக் கோட்ட அதிபர்கள் மத்தியில் உரையாற்றிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் இவ்வாறு கூறினார்.

தென்னிலங்கைக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. தா. மகாசிவம் மேலும் கூறியதாவது:

8 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வடக்கு — கிழக்கு மாகாண பாடசாலைகளில் பற்றாக்குறை நிலவுகிறது. ஆனால் கல்வி அமைச்சர் பிரதிநிதித்துவப்படுத்தும் தென் மாகாணத்திலோ 7 ஆயிரம் மேலதிக ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள்.

இலவசப் பாடநூல்கள் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு காலம் தாழ்த்தியே அனுப்பப்படுகின்றன; அவை கூட போதுமானதாக இல்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் கல்வி ஒதுக்கீடுகள் கூட அதன் தேவைகளை பிரதிபலிக்கக் கூடியனவாக இல்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-5-152)

பனை அபிவிருத்தி சபைக்கு இயந்திர உபகரணங்கள்

மாஹோவில் எடுத்துவரப்பட்டன

பனை அபிவிருத்திச் சபையின் கைதடி ஆராய்ச்சி நிலையத்துக்கு தேவையான ஆய்வு கூட இயந்திர உபகரணங்கள் வந்து சேர்ந்துள்ளன.

மாஹோ கப்பலில் இவை எடுத்து வரப்பட்டுள்ளன.

அத்துடன் பனை அபிவிருத்திச் சபையின் தேவைகளுக்கான வெற்றுப் பரல்களும், போத்தல்களும் வந்து சேர்ந்துள்ளன. இ-173

யாழ். ஆஸ்பத்திரி

கிருமி அகற்றும் இயந்திரம் பழுது

யாழ்ப்பாணம், மே 2

யாழ். போதனா வைத்தியசாலையின் கிருமி அகற்றும் பிரிவுக்கு அண்மையில் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட கிருமி அகற்றும் புதிய இயந்திரம் பழுதடைந்து திருத்த முடியாத நிலையில் உள்ளது.

உள்ளூர் பொறியிலாளர் பலர் இதனை பழுதுபார்க்கும் முயற்சியில் பல தடவைகள் ஈடுபட்டும் பயன் கிடைக்கவில்லை.

கிருமி அகற்றுவதற்கு உள்ளே செலுத்தப்பட்ட உபகரணங்களும் மீளெடுக்க முடியாத நிலையில் இயந்திரம் மூடப்பட்டபடியே உள்ளது.

இதனால் கிருமி அகற்றும் பிரிவில் கிருமி அகற்றும் வேலையும் மந்த கதியிலேயே நடைபெற்று வருகிறது. [இ-15]

நினைவு பேருரை

யாழ்ப்பாணம், மே. 02

வாலை அம்மன் சன்சமூக நிலையத்தினர் நடத்தும் வைத்தியகலாநிதி அமரர் இரத்தினசபாதி பாக்கியநாதனின் 2 ஆம் ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு இன்று மாலை 3. 30மணியளவில் யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி எஸ். பி. நடராசா மண்டபத்தில் நடைபெறும்.

சனசமூக நிலைய போஷகர் திரு. க. பரமசாமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'யாழ். பல்கலைக்கழக, இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எம். வேதநாதன் "சித்தரின் சமய சித்தாந்தம் — ஓர் ஆய்வு" என்ற பொருளிலான நினைவுப்பேருரையை நிகழ்த்துவார். [இ-5]

பெரிய புராண விரிவுரை பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், மே 2

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் கோட்டயம் பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் கடந்த மூன்று மாதங்களாக நடத்தப்பட்டு வந்த பெரிய புராண படன விரிவுரை பூர்த்தி விழா இன்று நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்குவார். (ஐ)

அரசு பாதுகாப்பு அனுமதியில்

தெரிவிப்பு

பொலீஸார் கைது செய்ய முயற்சி

கடந்த வார இறுதியில் மேற்படி நபர் தலைமையிலான குழு ஒன்று துப்பாக்கிகளுடன் வங்கிக்குள் புகுந்து வங்கியின் பெண் முகாமையாளரை பயமுறுத்தி பணத்தை கொள்ளையிட்டு சென்றிருந்தது.

ஏனையோரையும் கைது செய்யும் நடவடிக்கையில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர். (இ-14)

பிரங்கி கப்பல் குடியிருப்புகளை நோக்கி வேட்டு

பருத்தித்துறை, மே 02

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கடற்பிராந்தியத்திலிருந்து தினமும் காங்கேசன் துறைப் பகுதிக்கு ரோந்து செல்லும் கடற்படைப் பிரங்கிக்கப்பல்கள் குடியிருப்புக்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்க்கின்றன.

தற்போது கடற்படை ரோந்துக் கப்பல்கள் பகல் வேளையிலேயே செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது (இ-118)

ஏ. ஆர். வி. க்கு தட்டுப்பாடு

வடமராட்சி மே 2

விசர்நாய்க்கடி ஊசி மருந்தான ஏ. ஆர். வி. க்கு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (இ-173]

சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் செய்முறை

யாழ்ப்பாணம், மே 2

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியம் ஆண்டு எட்டு பொது விஞ்ஞான பாட விதானத்தில் உள்ள உடுக்கோவைவுக்கள் எனும் பகுதிக்கு செயல்முறை மூலம் விளக்கம் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

உடுக்கோல உருக்களை அவதானிக்கக் கூடிய கால நிலை தற்போது உள்ளதால் — இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்த விரும்பும் பாடசாலை அதிபர்கள், விஞ்ஞான ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றிய செயலர் டாக்டர் வி. சிவராசாவுடன் அல்லது தலைவர் திரு ஐ. வைத்தியநாதனுடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது (இ-14]

தனியாருக்கும் ஒய்வூதியம்

கொழும்பு, மே 02

தனியார் துறையினருக்கும் ஒய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நகல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

தொழில், தொழிற் பயிற்சி அமைச்சும் —

இலங்கையில் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் — இதற்கான வேலைத் திட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றன என தொழில், தொழிற் பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆராய்வதற்கென ஏற்கனவே 100 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

பிரிவுபசார விழா

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கிராமிய ஆபிவிருத்தி அலுவலராக கடமையாற்றி மன்னார் மடுப்பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் வ. இராஜராஜேஸ்வரனுக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் செயலக நிர்வாக உத்தியோகத்தர் செ. முருகையா உதவி நிட்டமிடல் பணிப்பாளர் திருமதி கு. மகேந்திரா கிராம அலுவலர்கள் சு. தங்கவேலு, மயிலோன், இரா. அம்பலவாணர் உட்பட பலர் உரையாற்றினார்கள். [இ-117]

நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L 97

கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

பிரிவு II
ஆரம்பம்: **06 - 05 - 1995** (சனி)

பொருளியல்	—	திரு உதயன்
கணக்கியல்	—	திரு. ஸ்ரீ
வர்த்தகம்	—	பிரபல ஆசிரியர்
அளவையியல்	—	திரு S. S. மனோகரன்
இந்து சமயம் / இந்து நாகரிகம்	—	திரு. சோதி
புவியியல்	—	திரு. வேலா
தமிழ்	—	திரு. குழந்தை
அரசியல்	—	திரு. சிவனேசன்
வரலாறு	—	திரு. பிள்ளை
நாடகம்	—	திரு. சத்தியா

[சி-1333]

நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிரியையும்
(03 - 05 - 1995 புதன்கிழமை)

அமரர்
கந்தையா குமரேசு
தோற்றம்: 1903 — 09 — 10
மறைவு: 1995 — 03 — 29

திருமதி
குமரேசு தங்கம்மா
தோற்றம்: 1908 — 06 — 06
மறைவு: 1995 — 04 — 05

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயரில் கொண்ட இவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை [03 - 05 - 1995] புதன்கிழமை நடைபெறும் அந்தியேட்டியிலும், வீட்டுக்கிரியையிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பிட்டப்பிள்ளை

பிராமணத்தெரு,
தும்பளை, பருத்தித்துறை

கண்ணீர் அஞ்சலி

திருமதி
தம்பிப்பிள்ளை இளையபிள்ளை
[வேலணை]

எமது பாடசாலை முன்னாள் ஆசிரியர் திரு. ச. மாணிக்கவாசகர் அவர்களின் அன்பு மாமியாரும், எமது பாடசாலை அதிபர் திருமதி சிவபாக்கியம் மாணிக்கவாசகர் அவர்களின் அன்புத் தாயாருமாகிய திருமதி தம்பிப்பிள்ளை இளையபிள்ளை அவர்களின் மறைவிற்கு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்.
153, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [36486]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாக நின்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பியிருந்த அரசுக்கும், இராணுவத்திற்கும் இன்று எமது தேசியத் தலைவரின் அயராத முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ள விமானப்படை எதிர்ப்பு பிரிவு அரசின் மிகப் பெரிய நம்பிக்கைக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளது.

வெற்றிகரத் தாக்குதல்

இப்படைப்பிரிவானது குறிப்பிட்ட சில மனிதியாலங்களுக்குள்ளேயே தனது இரு வெற்றிகரத் தாக்குதல்களை நடத்தி பல கோடி ரூபா பெறுமதியான விமானங்களையும் நூற்றுக்கணக்கான ஆக்கிரமிப்பாளர்களையும் அழித்துள்ளது.

இந்த இராட்சத விமானங்கள் எமது மண்ணில் நூற்றுக்கணக்கான பீப்பாய் குண்டுகளை வீசி உடைமைகளை அழித்து, பல உயிர்களைக் குடித்தது யாவரும் அறிந்ததே.

பல ஆயிரக்கணக்கான மக்களை காயப்படுத்தி ஊனப்படுத்தியதையும் நாம் அறிவோம்.

இன்று இந்த விமானங்கள் எமது மண்ணிலேயே சுட்டு வீழ்த்தப்பட்டு சிதைந்து கிடப்பதை நாம் காண்கிறோம்.

ஆறுமாத காலமாக பேச்சுவார்த்தை என்றும் —

சமாதானம் என்றும் கூறி தமிழ் மக்களின் அறாவட்ட கஷ்டங்களை புறந்தள்ளி சர்வதேச நாடுகளுக்கு தன்னை ஒரு சமாதானப் பெருந்தலைவியாகக் காட்டி, அந்த நாடுகளின் உதவிகளைப் பெற்று தன்னை ஸ்திரப்படுத்துவதே சந்திரிகாவின் நோக்கம்.

இதனாலேயே மீண்டும் போராடித்தான் நாம் நமது உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டோம்.

விடுதலைப்புலிகள் பலவீனமான நிலையில் நின்றே பேச்சுவார்த்தை, சமாதானத்தீர்வு என்ற முடிவுகளை எடுத்தார்கள் என்றுசந்திரிகா கருதுவதே இன்றைய தூர்பாக்கிய நிலைக்கு காரணம்.

தமிழ் மக்களின் உரிமைகள் என்ற நிலையிலும் —

பலத்தின் அடிப்படையிலும் —

சமநிலையிலுமே —

பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டுமே தவிர தமிழ் மக்கள் பலவீனமானவர்கள், சிங்களதேசியத்துக்கு அடிபணிய வேண்டும் என்ற நிலையோடு பேச முற்படுவது மிகவும் முட்டாள்தனமானது.

பேச்சுவார்த்தை மூலம் உரிமைகள் கிடைத்து சமாதானம் மலரும் என்ற நம்பிக்கையுடன் இருந்த காலம் போய் மீண்டும் எமது இனம் உறுதியாக நின்று போராடி எமது உரிமைகளை மீட்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அவசரப்பட்டது ஏன்?

இங்கு சிலர் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

விடுதலைப் புலிகள் மிக அவசரமாக இந்த முடிவை எடுத்து விட்டார்கள் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

ஏன் நாம் அவசரப்பட்டு இந்த முடிவை எடுத்தோம்? எமக்கு யுத்தம் அவசியமா?

இந்த முடிவை நாம் எடுத்ததற்கு பலகாரணங்கள் உள்ளன.

காலம் காலமாக நாம் ஏமாற்றப்பட்ட வரலாறு தான் உள்ளது

பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்பவற்றில் ஏற்படும் இழுத்தடிப்புக்கூட, சந்திரிகா அரசின் ஸ்திரத்தையும், இராணுவ ரீதியான பலப்படுத்தலையும் நாம் ஏற்றதாக முடியும்.

காலப்போக்கில் அரசியல் பேச்சு, இனப்பிரச்சினை தீர்வு என்று கூறி வந்து பேச்சுவார்த்தையை குழப்பி மீண்டும் ஓர் பெரிய யுத்தத்தை எமது மக்கள் மீது அவர்கள் திணிப்பார்கள்.

உறுதியான சமாதானத்தை நோக்கிச் செல்லவேண்டும். இல்லையேல் நாம் யுத்தத்தின் மூலம் எமது மக்களுக்கு சுதந்திரத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது.

எமது பொறுமையை, நல்லெண்ணத்தை அரசுக்கு காட்டியுள்ளோம். அதை பயன்படுத்த அரசு தவறிவிட்டது என்றே கூறவேண்டும். —இவ்வாறு அவர் கூறினார். [அ-3-9]

மேதினப் பேரணியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவக் கெடுபிடிகள், பொருளாதாரத் தடை, பேச்சுவார்த்தையில் ஏமாற்ற முனைந்தவை ஆகியவற்றைக் கண்டிக்கும் கோஷங்கள், பேரணியில் எழுப்பப்பட்டன. அதே வகையில் அமைந்த சுலோக அட்டைகளையும் மக்கள் ஏந்திச் சென்றனர்.

மக்கள் பேரணியாக நடந்து வருவதற்கு இடை இடையே அலங்கார ஊர்திகள் ஓர் ஒழுங்கு முறையில் சென்று, பேரணிக்கு அழகு சேர்த்தன. பேரணியில் கலந்து கொண்டவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் உருவப்படத்தை எடுத்து வந்தனர். அதே போல அலங்கார ஊர்திகளிலும் தலைவர் பிரபாகரனின் உருவப்படங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட "ஐவ்ரோ" விமானத்தில் சிதைந்த ஒரு பகுதியும் அலங்கார ஊர்தி ஒன்றில் எடுத்து வரப்பட்டது.

பல அலங்கார ஊர்திகளில் சந்திரிகா சமாதானப் புறாவை கையில் வைத்துக் கொண்டிருக்க, படையினர் தமிழ் மக்களைத் துன்புறுத்தும் காட்சிகள் காண்பிக்கப்பட்டன. இன்னும் சில ஊர்திகளில் சந்திரிகா போலவேடம் போட்டவர்கள் படையினரால் சூழப்பட்டிருக்க, அவர் இரண்டு முகங்களைக் காட்டுவது நடித்துக் காண்பிக்கப்பட்டது.

திருமலையில் சிதறடிக்கப்பட்ட கப்பல்கள், சுட்டு வீழ்த்தப்பட்ட விமானங்கள் ஆகியனவும் ஊர்திகளில் காட்சிகளாக வரையப்பட்டிருந்தன.

வெட்டுப் புள்ளியாக்கப்பட்டிருக்கும் தமிழ் மாணவர்களுக்கு சந்திரிகா அரசு கையளித்து விட்டதை காட்டுவதாக அமைந்த ஊர்தியும் —

நாய்க்கு எலும்புத் துண்டு போடுவது போல (தமிழீழ ஆசிரியர்களை நாயாகவும், சமபல உயர்வை எலும்புத் துண்டுகளாகவும்) காட்டும் ஊர்தியும்— ஏனையவற்றை விடக் கருத்து மிளிர்பவையாக அமைந்தன.

கோட்டரீதியாகவும், வட்டரீதியாகவும் அவரவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் குடாநாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் வந்த மக்கள் நண்பகலில் கூடினர்.

தத்தமது இடங்களில் இருந்து எல்லோரும் மருதனார்மடம் சந்தியில் கூடினர். மே நாள் பேரணி பற்பகல் 2.20 மணிக்கு மருதனார் மடத்தில் இருந்து யாழ் பல்கலைக்கழகம் நோக்கிப் புறப்பட்டது.

விமான எதிர்ப்பு ஆயுதங்களுடன் பாதுகாப்பு

பேரணி ஆரம்பித்த நேரத்தில் இருந்து வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்ததால் மக்கள் அதிகம் களைப்புறாமல் அதில் நடந்து சென்றனர்.

பேரணியில்சென்ற மக்களுக்கு விடுதலைப புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களுடன் பாதுகாப்பு வழங்கினர்.

யாழ்ப்பாண மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. எஸ் இளம்பரிதி பேரணியை ஆரம்பித்து வைத்தார்.

மருதனார் மடம் சந்தியில் இருந்து யாழ்ப்பாண வீதியில் சுமார் 400 யார் முன்பிருந்து ஒட்டோ மற்றும் மோட்டார் ஊர்திகளின் அணி ஆரம்பிக்க —

தமிழீழ தேசியகொடி முன்னெடுத்துச் செல்லப்பட —

இசை அணியினர் இசை எழுப்பிச் செல்ல —

விடுதலைப் புலிகளின் கடற்புலி அமைப்பினர், தமிழீழ காவல்துறையினர், மாணவர் அமைப்பினர் பின்தொடர —

தமிழீழ தேசிய தலைவரின் மிகப்பெரிய உருவப்படம் ஒன்று பேரணி ஆரம்பத்தில் எடுத்துச் செல்லப்பட்டது.

பேரணியில் மதகுருமார்

அதனைத் தொடர்ந்து தமிழீழத்தின் படம் எடுத்துச் செல்லப்பட்ட இந்து, கிறிஸ்தவ மதகுருமார் பேரணியில் பின் தொடர்ந்தனர்.

கரும்புலிகளின் பாரிய கப்பல் ஒன்று முதலாவது ஊர்தியாக நகர்ந்து சென்றது.

பின்னால் — தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தினரின் ஊர்தியும் நிறுவன பணியாளர்களும் தொடர்து வந்தனர்.

வடமராட்சிக் கோட்டத்துக்குட்பட்ட அணியினர் பேரணியின் ஆரம்பத்தில் சென்றனர்.

அவர்களைத் தொடர்ந்து தென்மராட்சி, தீவகம், வலிகாமம் கோட்டத்தை சேர்ந்த அமைப்புக்களின் அணியினர் சென்றனர்.

கூட்டுறவுத்துறை ஊழியர்கள், கிராமிய உழைப்பாளர் சங்கத்தினர், கல்விச் சமூகத்தை சேர்ந்தவர்கள், வர்த்தகர்கள், அரச திணைக்கள ஊழியர்கள், உள்ளூராட்சி பணியாளர்கள், சுகாதார, வங்கி ஊழியர்கள், குடிசார் பொறியிலாளர்கள், ஏனைய மக்கள் அமைப்புக்களை சேர்ந்த பலரும் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணியில் பேரினவாதம், அடக்குமுறை, பெண்ணடிமை மற்றும் ஒடுக்குமுறைகள் பற்றிய சித்திரிக்கும் ஊர்திகளும் எடுத்து வரப்பட்டன.

கலை அம்சங்கள்

பொம்மலாட்டம், குதிரை ஆட்டம், கரக ஆட்டம் காவடி போன்ற கலை அம்சங்கள் பேரணிக்கு அழகு சேர்த்தன.

கவிதைகள், நாட்டார் பாடல்கள், விடுதலைக் கீதங்கள் பலவித இசைகளிலும் பேரணியில் வானைப் பிளந்தன.

பேரணி ஓர் இடத்தைக் கடந்து செல்ல இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் சென்றது.

மருதனார்மடத்தில் பி.ப. 2.20 மணிக்கு ஆரம்பித்த முதலாவது அணியினர் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தை மாலை 5.30 மணிக்குச் சென்றடைந்தனர்.

அதனைத் தொடர்ந்து மைதானத்தில் பாண்டு வாத்தியம் சங்கீதம் மரியாதை அணிவகுப்பு நடைபெற்றது.

அதன் பின்னர் யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி ரூபன், தமிழீழ தேசிய கீதத்துடன், தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைக்கப் பொதுக்கூட்டம் ஆரம்பமானது. (அ-15-152)

தெற்கில் மேதினப் பேரணி நடத்த முடியாத நிலை உருவாக்கியுள்ளோம்

காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் உரை

யாழ்ப்பாணம், மே 2

தொன்னாசியாவிலேயே மேதினத்தை கொண்டாட தகுதி பெற்றவர்களான நாம் இங்கு அதனைச் சுதந்திரமாக கொண்டாடுகிறோம்.

எம்மை அடக்கி ஆளும் சிங்கள பேரினவாதம் ஸ்ரீலங்காவில் மேதினத்தை கொண்டாட வோ, பேரணி நடத்தவோ முடியாத நிலையை நாம் உருவாக்கியுள்ளோம்.

இப்படிக் கூறினார் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன்.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்த மேதின விழாப் பொதுக் கூட்டம் நேற்று மாலை பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெற்றது. அதில் கலந்து பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. நடேசன் மேலும் கூறியதாவது.

மேதினத்தை கொண்டாட தகுதி பெற்றவர்கள் அடக்கப்பட்டவர்களே.

மற்றொரு இனத்தை அடக்கி ஒடுக்குபவர்கள் மேதினம் கொண்டாட தகுதியற்றவர்கள்.

நாம் இன்று சுதந்திரமாக, எழுச்சியாக மேதினத்தை கொண்டாடுகிறோம். ஆனால் தெற்கில் பெரும்பகுதி நாட்டின் மத்தியில் மேதினம் நடக்கிறது. அங்கு அவர்கள் நடமாட முடியாத நிலை எம்மால் ஏற்படுத்தப்பட்டதால் அவர்களால் சுதந்திரமாக கொண்டாட முடியவில்லை

இரு நாடுகளுக்கு இடையில் யுத்தம் நடக்கும் போது தான் பொருளாதாரத்தடை நடைமுறைப்படுத்தப்படும் குண்டு வீச்சு நடத்தப்படும்.

யுத்தம் ஆரம்பிக்கு முன்னரே பொருளாதாரத் தடையை விதிப்பதும், குண்டு வீச்சை நடத்துவதும் இங்கு இரு நாடுகள் உள்ளன என்பதை ஸ்ரீலங்கா அரசு மறைமுகமாகஏற்றுக்கொண்டதாக கொள்வதாகத்தான் — என்றார்.

வெகுஜன அமைப்புகளின் ஒன்றிய தலைவர் திரு. சு. சிறில், சல்வித்துறைசார்பாக திருமதி கோகிலா மகேந்திரன், வர்த்தகம் சார்பாக திரு. சோவிந்தசாமி, கடற்றொழிலாளர் சார்பில் மரியாம்பிள்ளை, கடற்புலிகள் யாழ் மாவட்ட பொறுப்பாளர் இமையவன், மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதி ஆகியோரும் உரையாற்றினர். (அ-3)

சுலோகங்கள் சில

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற மேதினப்பேரணியில் மக்களால் எடுத்துச் செல்லப்பட்ட சுலோக அட்டைகள் சிலவற்றில் இருந்த வாசகங்கள் இவை:

★ "சந்திரிகாவே எமக்கு தேவை சலுகைகள் அல்ல; உரிமைகள்.

★ "கூடிப் பேசிக் காலத்தைக் கடத்தாதே; நாடிப் பேச நல்லமனத்துடன்.

★ "எங்கள் தலைவன் பிரபாகரன் அவன்பாதை தமிழ் மக்களின் வாழ்வை

★ "தமிழினம் உயிர்த்திட தலைவன் வழியில் நடந்திடுவோம்

★ "தமிழீழத்தில் செல்வீச்சு, பாரெலாம் சொல்வீச்சு, பேசுவதோ வெறும் பேச்சு.

★ இனவாத அரசே தமிழீழ மண்ணை மீண்டும் மிதித்தால் உன் உடல்கள் துண்டு துண்டாகச் சிதறும். (அ-15)

மக்கள் கோஷங்களில் சில

நேற்று நடைபெற்ற மேதினப் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் எழுப்பிய கோஷங்களில் சில இவை.

★ விரும்பிடு தமிழனே — விடுதலைப்போர் தொடு — கரம் கொடு புதிய எம் சரித்திரம் எழுதிட.

★ மண்ணினை மீட்பது முதல் வேலை. அதில் மாண்பினை சேர்ப்பது மறுவேலை.

★ இடம்பெயர்ந்தோர் தம் மண்ணுக்குத் திரும்ப இராணுவத்தை அகற்று

★ தன்னிறைவான பொருளாதாரமே தேசிய வாழ்வுக்கு மூலாதாரம்

★ மேநாளில் சேர்ந்திருக்கிறோம். ஏமாற்ற யோசிக்காதே!

★ புனர்நிர்மாணப் பேச்சு, புஷ்வாணமாச்சு!

★ கூடிப் பேசிக் காலம் கடத்தாதே. நாடிப் பேச நல்ல மனதுடன்.

★ ஏச்சுப் பிழைத்த காலம் போச்சு. நாம் ஏமாந்த காலமும் போச்சு!

★ பேசியதைக் கொடு. பெரும் போரைத் தடு.

★ சுதந்திரம் எமது பிறப்புரிமை; சுட்டெரிப் போம் அதைத் தடுப்பவரை. (அ-152)

ராணுவ ரீதியான அச்சுறுத்தலை ராணுவ பாணியில் எதிர்கொள்வோம்

ஆனால் சமாதான முயற்சி தொடரும் என்கிறார் பீரிஸ்

தற்போதைய யுத்த நடவடிக்கைகள் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை குழப்பிவிடமாட்டா. இராணுவப் பாங்கான அச்சுறுத்தல்களை இராணுவ பாணியில் எதிர்கொள்ள வேண்டும். ஆனால் சமாதான முற்சிகள் தொடரும். இரண்டும் வேறுபட்ட விடயங்கள் ஆகும்

— அமைச்சர் பேராசிரியர் ஜீ எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

வாஷிங்டன் மற்றும் பாரிஸ் விஜயங்களை முடித்துக் கொண்டு அமைச்சர் பீரிஸ் நேற்று முன்தினம் நாடு திரும்பினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு அபரிமிதமான சர்வதேச ஆதரவு காணப்படுகிறது.

இலங்கை அரசு எடுக்கின்ற துணிச்சரமான நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி பாராட்டுத் தெரிவித்தார்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒவ்வொரு பிரதிநிதிகளும் பாராட்டுத் தெரிவித்தனர் என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். [ஐ]

போர் தொடுக்க நினைத்தால் பின் முடிவில் மாற்றம் இருக்காது

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர் தொடுக்கவேண்டும் என்று தீர்மானித்தால் அரசின் அந்த முடிவில் பின்னர் மாற்றமே இருக்காது.

"இந்தியா ருடே" சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னண்டவாறு விதரிவித்துள்ளார்.

அண்மையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் நூறு பேர் வரை இறந்துள்ளதை அரசு மறக்கவில்லை. அதனைத் தட்டிக் கேட்காமல் விடப்போவதும் இல்லை.

எதிர்த் தாக்குதலை எவ்வாறு நடத்தலாம் என்பது குறித்து இராணுவம் ஆலோசித்து வருகிறது.

விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் தமது பெயரே முதல் இடத்தில் இருக்கிறது என்று அந்தப் பேட்டியில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாகரனை கடுமையாகச் சாடும் பாணியில் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-4]

"இந்தியா ருடேக்கு" சந்திரிகா பேட்டி

மேதின கூட்டங்களில் சனத்திரள் இல்லை

கொழும்பு வீதிகள் வெறிச்சோடின

தலைநகர் கொழும்பிலும், தெற்பகுதியின் ஏனைய இடங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் மேதினக் கூட்டங்கள் நடைபெற்றன

விடுதலைப புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சத்தில் கொழும்பு நகர வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தன. குறைந்தளவு மக்களே கலந்து கொண்டனர்.

விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்துமுகமாக பேரணிகளை நடத்தவேண்டாம் என அரசு விடுத்த கோரிக்கையை ஏற்று சில அரசியல் கட்சிகளும், தொழிலாளர் அமைப்புகளும் தங்கள் பேரணிகளை ரத்துச் செய்திருந்தன.

தலைநகரில் மேலோட்டமாக 6 ஆயிரம் பொலீஸார் நேற்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கூட்டங்களை நடத்தும் அரசியல் கட்சியினர் மற்றும் தொழிலாளர் அமைப்பினர் தத்தமது பாதுகாப்பு குறித்து கவனம் எடுக்கவேண்டும் என்று பொலீஸார் முன்னதாகவே கேட்டுக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வழமையான நாட்களை விட கொழும்பு வீதிகளில் நேற்று சனநடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

ஜே வி பியினரின் மேதினப் பேரணி ஹெக்ரி பிரட்டிக் பூங்காவில் இருந்து ஆரம்பமாகியது.

பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் இளைஞர்களே அதிகளவில் கலந்து கொண்டனர். பொலீஸ் உதவி இன்றி அவர்களே பாதுகாப்பு ஒழுங்குகளைக் கவனித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திரு நிஹால் கலப்பதி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். (ஐ-3-4-6]

கைது

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பதவி விலக வேண்டும் எனக் கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தி.மு.க. தொண்டர்கள் சுமார் 6 ஆயிரம் பேர் பொலீஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர். (ஐ-3)

மரண அறிவித்தல்

திருமதி
தம்பிப்பிள்ளை இளையபிள்ளை
(வேலணை, முத்துமாரி அம்மன் கோவிலடி)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை இளையபிள்ளை 1-05-95 ஆம் திகதி காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம்- தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகம்மா, காங்கேசு, சின்னராசா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னலக்ஷ்மி, பகவதி (இளைப்பாறிய ஆசிரியை, கட்டுவன்), சிவபாக்கியம் (அதிபர் வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்), திருநாவுக்கரசு (சுவிஸ்), காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சிதம்பரநாதன் B A., (விலைக் கட்டுப்பாட்டதிகாரி, கச்சேரி, வவுனியா), சித்திரவேல் B A, (உதவிப் பணிப்பாளர், கொர்நிறவலம், கிளிநொச்சி), கைலாசநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற முருகானந்தராசா ஆகியவர்களின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற ச. சாரதேவதினம், காலஞ்சென்ற வை. இரத்தினம் [இளைப்பாறிய ஆசிரியர்), மற்றும் மாணிக்கவாசகர் [இளைப்பாறிய ஆசிரியர், வேலணை], இராஜேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்ற பாக்கியலெக்ஷ்மி, மற்றும் கனகசுந்தரி B A Dip in Ed. (அதிபர், முத்தத்தம்பி மகாவித்தியாலயம், திருநெல்வேலி, புஷ்பா B A., Dip in Ed (ஆசிரியை, குருநகர்), ரமணி (சுவிஸ்) ஆகியவர்களின் அன்பு மாமியாரும், திரு. திருமதி கிருபாநாதன் (ஜேர்மனி), யோகரெணி (சுவிஸ்), Dr இளந்திரையன் M D (கனடா), இளஞ்செழியன் L. L B LL M (சுவிஸ்), சதிர்காமநாதன் (சுவிஸ்) சிவகௌரி M.A., கிரி, மாலினி (சுவிஸ்), இராஜினி B A., ஜீவமலர், சாந்தி (பிரான்ஸ்) வசந்தி, சாந்தன் (பிரான்ஸ்), இளங்குமரன் (சுவிஸ்), இளம்பிறையன் (B com), சுகந்தினி சிவாஜினி, திருமாறன் (பிரான்ஸ்), திருவானந்தன் (சுவிஸ்), ஸ்ரீலா சுவிஸ்), ரதிகலா சுவிஸ்), பகிதரன் (சுவிஸ்), முரளி (சென் ஜேர்மன் கல்லூரி, யாழ்ப்பாணம்), சங்கீதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜனனி [சுவிஸ்], நிரோஜன் சுவிஸ், சுகிர்தா (சுவிஸ்), கஜன் [சுவிஸ்], பிரசாந், கிரிசனி, விபூசன் ஆகியவர்களின் அன்புப் பேரத்தியும், கிரிசாந் வஜிதன் [ஜேர்மனி], நிதர்சன், நிசாந், அனுஜன், மயூரன் ஆகியவர்களின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2-05-1995) அவரின் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று மாலை 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளாக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. சிதம்பரநாதன்
(மகன்)
விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி வவுனியா

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி [36485]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org